පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
**UNIVERSITY OF PERADENIYA**
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

ශාස්ත්‍රවේදී සාමාන්‍යය උපාධි පරීක්ෂණය (බාහිර) - 2019

**பொதுக்கலைமானிப் பரீட்சை (வெளிவாரி-பழைய பாடத்திட்டம்) -2019**

**BA GENERAL DEGREE EXAMINATION IN ARTS- (EXTERNAL- Old syllabus) – 2019**

**<u>தென்னாசியப் புவியியல் (GG IV)</u>**

ஒரு பகுதியிலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக. முதாலாவது வினா கட்டாயமாகும். இவ்வினாத்தாளில் எல்லாமாக ஏழு (7) வினாக்கள் உள்ளன. தென்னாசியப்படம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

**நேரம்: (3) மூன்று மணித்தியாளங்கள்.**

---

## பகுதி 1

01. தரப்பட்டுள்ள தென்னாசியப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக. (25 புள்ளிகள்)

1.1. தென்னாசியாவில் இரண்டு தீவு நாடுகள். (02 புள்ளிகள்)
1.2. வங்காள விரிகுடா, காம்பே விரிகுடா (02 புள்ளிகள்)
1.3. மலபார், கோரமண்டலக் கரையோரங்கள் (02 புள்ளிகள்)
1.4. பெங்களுரு, ஹைதராபாத், சென்னை, புது டில்லி நகரங்கள் (04 புள்ளிகள்)
1.5. சுலைமான் மற்றும் பற்கை மலைத்தொடர்கள் (04புள்ளிகள்)
1.6. இந்து நதி (02 புள்ளிகள்)
1.7. தாமோதார் கைத்தொழில் வலயம் (02 புள்ளிகள்)
1.8. இந்தியாவில் இரண்டு பிரதான தேயிலைப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்கள். (02 புள்ளிகள்)

தரப்பட்டுள்ள இடத்தில், பின்வரும் இடங்களுக்கிடையிலான தரைத்தோற்ற தன்மைகளைக் காட்டக்கூடிய அண்ணளவான குறுக்கு வெட்டுமுகம் ஒன்றினை வரைக.

i. A-B (01 புள்ளி)

ii. C-D (02 புள்ளிகள்)

iii. E-F (02 புள்ளிகள்)

## பகுதி 2

02. (அ) தென்னாசியாவின் நான்கு பிரதான பௌதிக உப பிரதேசங்களும் எவை? அவற்றின் குறிப்பிடத்தக்க பண்புகளைப் வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) கங்கை நதிப் பள்ளத்தாக்கின் பௌதிகக் கட்டமைப்பையும், விவசாய நடவடிக்கைகளுக்கான அதன் பொருத்தப்பாட்டையும் விளக்குக. (17 புள்ளிகள்)

03. (அ) வரைபடம் ஒன்றினைப் பயன்படுத்தி, தென்னாசியாவின் சூறாவளிப் பாங்கினை ஆராய்க. (10 புள்ளிகள்)

(ஆ) வங்காள விரிகுடாவின் வானிலை உறுதிப்பாடற்ற தன்மை அயல் நாடுகளில் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களை ஆராய்க. (15 புள்ளிகள்)

04. பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி, தென்னாசியப் பிரதேசம் கடந்த இரண்டு தசாப்தங்களில் எதிர் கொண்ட ஐந்து சூழற் பிரச்சினைகளை ஆராய்க. (25 புள்ளிகள்)

## பகுதி 3

05. 'சமூக அரசியல் அமைதியின்மை காரணமாக தென்னாசியாவானது ஒரு கொந்தளிப்பான பிரதேசங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது'. இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (25 புள்ளிகள்)

06. பின்வரும் அட்டவணை தென்னாசிய நாடுகளின் 2014-2018 காலப் பகுதிக்கான மொத்த உள்ளநாட்டு உற்பத்தியின் போக்கினைக் காட்டி நிற்கின்றது (உலக வங்கி அறிக்கை). இந்நிலைமையை விமர்சன ரீதியாக ஆராய்ந்து, இப்பின்னனிக்கான காரணங்களையும் விளைவுகளையும் விளக்குக. (25 புள்ளிகள்)

**தென்னாசிய நாடுகளின் 2014-2018 மொத்தத்தேசிய உற்பத்தி வளர்ச்சியின் சராசரி**

| | நாடு | சராசரி மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி (2014-2018) | மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி (2018 மாத்திம்) |
|---|---|---|---|
| 1 | ஆப்கானிஸ்தான் | 2.6 | 1.0 |
| 2 | வங்காளதேசம் | 6.5 | 7.9 |
| 3 | பூட்டான் | 5.8 | 5.7 |
| 4 | இந்தியா | 7.4 | 7.2 |
| 5 | மாலைத்தீவு | 5.7 | 7.9 |
| 6 | நேபாளம் | 5.4 | 6.3 |
| 7 | பாக்கிஸ்தான் | 4.8 | 5.8 |
| 8 | இலங்கை | 6.0 | 3.2 |

07. தென்னாசியா, பிரதேசம் என்ற வகையில் அண்மைக் காலத்தில் எதிர்நோக்கி வரும் சமூக பொருளாதார சவால்களை ஆராய்க. (25 புள்ளிகள்)